**வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | **18/05/2024** | முதல் | **22/05/2024** |
| அறிக்கை எண் : | **040/ 2024** | வெளியீட்டு நாள் : | **17/05/2024** | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°-26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| **கடந்தவார வானிலை** (12.5.2024 **முதல்** 16.05.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 22-05-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12/05 | 13/05 | 14/05 | 15/05 | 16/05 | **தேதி** | **நாள்-1** 18/05 | **நாள்-2** 19/05 | **நாள்-3** 20/05 | **நாள்-4** 21/05 | **நாள்-5** 22/05 |
| 4.4 | 5.2 | 14.6 | 1.2 | 31.3 | மழை (மி.மீ) | 29 | 35 | 31 | 26 | 34 |
| 37 | 37 | 38 | 37 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 32 | 31 | 30 | 28 | 28 |
| 26 | 26 | 26 | 26 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 24 | 22 | 22 | 21 |
| 5 | 5 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 80 | 70 | 77 | 79 | 94 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 80 | 80 | 80 | 90 |
| 54 | 71 | 69 | 72 | 61 | | 50 | 50 | 50 | 70 | 80 |
| 8 | 11 | 5 | 8 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 6 | 6 | 8 |
| தென் கிழக்கு | மேற்கு | வடக்கு | தென் மேற்கு | வட **கிழக்கு** | **காற்றின் திசை** | மேற்கு | வட மேற்கு | தென் மேற்கு | வட மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 18, 19, 20, 21 மற்றும் 21 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 28°-32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 21° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், மேற்கு, வடமேற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (17- 30 மே 2024):**

**மழைப்பொழிவு :**

17-05-2024 - 23-05-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

24-05-2024 - 30-05-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

17-05-2024 - 23-05-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட குறைவாக காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

24-05-2024 - 30-05-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பை ஒட்டியே காணப்படும்.30° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

17-05-2024 - 30-05-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 18, 21 தேதி கன மழையும் மற்றும் 19, 20 தேதி கன மழை முதல் மிக கன மழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரி செய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மே 18, 19, 20, 21 மற்றும் 22 தேதி இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு. மேலும், மணிக்கு 30 முதல் 40 கி.மீ வேகத்தில் தரைக் காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டு கொடுத்தல், பப்பாளி, கொய்யா, முருங்கை பயிர்களுக்கு மண் அனைத்தல், கரும்பு பயிருக்கு விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கொடி வகை பயிர்பந்தல்களில் துரு பிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : மக்காசோளம், கொடிவகை பயிர்கள், வாழை, தென்னை, கால்நடை.**

**மக்காசோளம்:**

நிலத்தில் சரியான வடிகால் வசதியினை ஏற்படுத்தவும். உரமிடுதல்> பூச்சி மருந்து தெளித்தல் போன்ற பணிகளை ஒத்திவைக்கவும். முதிர்ந்த காய்கள் அல்லது பழங்கள் நிலத்திலேயே வீணாவதை தவிர்க்க உடனடியாக அறுவடை செய்து பாதுகாப்பான இடத்தில் வைக்கவும்.

**கொடிவகை பயிர்கள்:**

கனமழை மற்றும் காற்று காரணமாக கொடிவகை பயிர்களில் பந்தல், கம்பி மற்றும் கால்கள் முறிந்துவிட வாய்ப்புள்ளது. பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும்.

**வாழை:**

அதிக மழை காரணமாக வாழை மரங்கள் சாய்வதற்கான வாய்ப்புள்ளது. முறையான வடிகால் வசதியினை ஏற்படுத்த வேண்டும். காய்ந்த சருகுகளை அப்புறப்படுத்தவும்> 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கும் தார்விட்ட மரங்களுக்கும் முட்டுக்கால் வசதியினை ஏற்படுத்தவும்.

**தென்னை:**

கன மழை எதிர்பார்க்கப்படுவதால் தென்னையில் காய்ந்த மற்றும் முதிர்ந்த காய்களை பறித்துவிடவும் பழைய காய்ந்த மட்டைகளை அகற்றி விடவும். முறையான வடிகால் வசதியினை ஏற்படுத்த வேண்டும்

**கால்நடை:**

இடி மின்னலுடன் கூடிய கனமழை வருவதற்கான வாய்ப்புள்ளதால்> கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்புவதை தவிர்க்கவும். மின்கம்பம் மற்றும் மரத்தடியில் கட்டுவதை தவிர்;த்து பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கவும். வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை நன்கு உலர வைத்து கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்து தங்களது கால்நடைகளைப் பாதுகாக்கலாம்.

.